திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளையொட்டி சென்னை சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மேயர் சிட்டி பாபு தெரு, லோக் நகர், அருணாச்சலம் தெரு, கான் பாக் தெரு ஆகிய இடங்களில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.2.2026) பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன் உள்ள கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

நெல்லை மாவட்டம் நாங்குநேரி அருகில் உள்ள பெரும்பத்து கிராமத்தில் நடைபெற்ற சம்பவத்தில் காயமடைந்து நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று வரும் நெல்சன் மற்றும் கணேசன் ஆகியோரை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் ஆகியோர் நேரில் பார்வையிட்டு அன்னாரது குடும்பத்தினரிடம் மாவட்ட நிர்வாகம் சார்பில் தேவையான உதவிகளை செய்து தரப்படும் என ஆறுதல் தெரிவித்தார்கள்.உடன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மருத்துவர் ரேவதி பாலன் உள்பட பலர் உள்ளனர்.

அமைச்சர் பி.கே.சேகர் பாபு தலைமையில்

99 வது வட்டக் கழக துணைச் செயலாளர் - ரா.முரளி இல்ல மணவிழா வரவேற்பு!

மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன் எம்.பி, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ வாழ்த்துரை!

சென்னை மார்ச்:5

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதி, 99 வது வட்டக் கழக துணைச் செயலாளர் ரா.முரளி, மு.சுமதி ஆகியோரின் மகள் மு.மோனிகாவுக்கும், செங்கல்பட்டு மாவட்டம்,தாழம்பூர் கிராமம் சி.சேட்டு,சே. மகா ஆகியோரின் மகன் ராஜ்குமாருக்கும் திருமண வரவேற்பு விழா இன்று (5.3.2026 வியாழக்கிழமை) மாலை 6:00 மணி அளவில் சிறுசேரி மெயின் ரோட்டு, அண்ணா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

மணவிழா வரவேற்பு நிகழ்ச்சிக்கு சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர்,இந்து சமய அற நிலையத் துறை அமைச்சர் பி. கே.சேகர்பாபு தலைமை வகிக்கிறார்.

சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன் எம்.பி,இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வட்டச் செயலாளர் ஆர்.எம். ரங்கநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மேலும் நிகழ்ச்சியில் புனிதவதி எத்திராசன்,சொ. வேலு,வி.சுதாகர், பரிதி இளம் சுருதி எம்.சி,புரசை ஜி.தாமோதரன்,கோ. மணி, சி.சேகர், பி.சி.சம்பத்குமார்,எம். தில்லை குமார், சூளை சுப்பராயலு, த. ஜெயக்குமார்,

டி.செபாஸ்டியன், புரசை வி.ரவி,இ.எம். ராஜன், கே.ஆர்.முரளி,ஆர். எஸ்.வெங்கடேசன், எம். கோமளா, வரதராஜன், சதீஷ்குமார், ஏ. சுகுமார், என் சீனிவாசன்,ஆர்.கே. புரம் சிவா,சாலை மாநகர் மாது, மீன் மோகன்,மு. இங்கோ, புஷ்பலதா, கென்னடி, அப்பாதுரை,ரசாக், சண்முகம், அன்பரசு, அன்னை பாஸ்கர், விஸ்வா,

ராஜேந்திரன், ஜோஸ்வா, சாந்தலிங்கம், ரகுராம், சம்பத்குமார், குருநாதன், செந்தில்குமார், மஞ்சுளா,தணிகாசலம்,ஏழுமலை, தினேஷ்குமார், சந்திரமோகன், அர்ஜின், எம்.விஜயகாந்த், செந்தில் நாதன், க.அன்பரசு, சரவணன் நா.சீனிவாசன், அருண்ராஜ், நாகராஜ், கணேசன்,காளி என்கிற சரவணன், போட்டோ புருஷோத், சுதாகர், எட்டியப்பன் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மு.விஷால் நன்றியுரையாற்றுகிறார்.

கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, நகரம் –

ஒன்றியக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம்!

செயலாளர் டாக்டர். அ. சுபேர் கான் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, மார்ச்.5-

சிறுபான்மையின மக்களின் பாதுகாவலர் கழகத் தலைவர்; முதல்வர் அவர்களின் நல் வழிகாட்டுதலின் படியும், கழக இளைஞரணிச் செயலாளர்; தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் ஆலோசனையின்படியும், கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில, மாவட்ட, மாநகர,பகுதி, நகரம் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் காணொலி காட்சி வாயிலாக மாநிலச் செயலாளர் டாக்டர். அ. சுபேர் கான், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதலாவதாக, மறைந்த சுதந்திரப் போராட்ட தியாகியும், கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவருமான நல்லக்கண்ணு அய்யா அவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கடந்த மாதம் நடைபெற்ற மாநாட்டில் வக்பு வாரியத்தில் பதிவு பெற்ற உலமாக்களுக்கு ஐந்தாயிரம் ரூபாய் மதிப்பூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியமாக ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு வழங்கப்படும் என அறிவித்த முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்ததுடன்,

உலமாக்கள் இருசக்கர வாகனம் வாங்க ரூபாய் ஐம்பதாயிரம் தமிழ்நாடு அரசு மானியம், அரசு உருது பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடம் நிரப்பப்படும், கல்லறை மற்றும் கபரஸ்தான் இல்லாத அனைத்து மாவட்டம் மற்றும் மாநகராட்சிகளிலும் அரசு சார்பில் கல்லறை மற்றும் கபரஸ்தான் அமைக்கப்படும்,

சென்னை மற்றும் மதுரையைத் தொடர்ந்து கோவையிலும் வக்ப் தீர்ப்பாயம் அமைக்கப்படும்

என பல்வேறு அறிவிப்புகளை வழங்கிய முதல்வர் அவர்களுக்கு அனைத்து சிறுபான்மையின மக்களின் சார்பாகவும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

வருகிற 9 ஆம் தேதி யன்று திருச்சியில் நடைபெறவுள்ள கழக நிர்வாகிகள் சந்திப்பில் பெரும் திரளாக கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் அணி திரள்வதும், மேலும் நடைபெறவுள்ள தேர்தலில் கழகம் ஏழாவது முறையாக வென்று கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை இரண்டாவது முறையாக மீண்டும் முதல்வர் அரியணை ஏற கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் அயராது உழைத்திடவும்,

ஒன்று கூடுவோம் வென்று காட்டுவோம்! வெல்வோம் இருநூறு! படைப்போம் வரலாறு! ஸ்டாலின் தொடரட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்! உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்! எஸ்.முரளி முன்னிலை!

124 அ வட்டத்தில் முதல்வர் பிறந்தநாள் விழா - நல உதவிகள்!

வட்டப் பொறுப்பாளர் மா.பா.அன்பு வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 05-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 124 அ வட்ட திமுக சார்பில் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்டம் வழங்கும் விழா இன்று (05.03.2026 - வியாழக் கிழமை) மாலை 5 மணியளவில் சத்தியவாணி முத்து நகரிலும்,

மாலை 7 மணியளவில் லாலா தோட்டத்திலும் பகுதி வாழ் மக்கள் சுமார் 1000 பேருக்கு நலத்திட்டங்களை கிழக்கு பகுதி செயலாளர் எஸ். முரளி முன்னிலையில், மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்.

மாநில மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர், அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

124வது அ வட்டப் பொறுப்பாளர் மா.பா. அன்பு வேண்டுகோள்விடுத்துள்ளார்.

தமிழ்நாடு தலைகுனியாது பரப்பரை கூட்டம் சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவெற்றியூர் மத்திய பகுதி செயலாளர் இரண்டாவது மண்டல குழு தலைவர் ஏ.வி.ஆறுமுகம் ஏற்பாட்டில் பகுதி செயலாளர் தி.மு. தனியரசு எம். சி. வை.மா. அருள் தாசன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம் .எல்.ஏ. தலைமை தாங்கினார். மாநில செய்தி தொடர்பாளர் தணிக்கை குழு உறுப்பினர் கான்ஸ்டைன் ரவீந்திரன் மற்றும் தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை ஆற்றினார். இதில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, வட்டச் செயலாளர்கள் வா.முத்துசாமி, சாலை டி.கணேசன், மு.செல்வம், த.ச.கரிகால சோழன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தொ.மு.ச. பேரவை வளாகத்தில்

கழகத் தலைவர் - முதல்வர் பிறந்த நாள் விழா!

சென்னை,மார்ச்.5-

தமிழகத்தின் விடிவெள்ளி, புத்துலகத்தின் நவீன சிற்பி, தமிழகத்தின் கொள்கை போராளி தமிழக முதல்வர் அவர்களின் 73வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை, தியாகராய நகரில் உள்ள தொ.மு.ச. பேரவை தலைமையகமான கலைஞரகத்தில் 02.03.2026 திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் சீரோடும், சிறப்போடும், எழுச்சியோடும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

பேரவை தலைவர் கி. நடராசன் தொ.மு.ச. கொடியேற்றியும், பேரவை பொருளாளர் கோ.சி.வள்ளுவன் அவர்கள் கழக கொடியேற்றியும், பேரவை அலுவலக செயலாளர் ஆ.சீ. அருணகிரி இனிப்பு வழங்கி, முதல்வர் தளபதி வாழ்க வாழ்க என கோஷமிட்டு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து பிற்பகல் 12.00 மணியளவில் அறுசுவை உணவு 1000 பேருக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பேரவை துணைத்தலைவர் இரா.பொன்னுராம், இணைப் பொதுச்செயலாளர் ஜெ. விஜயகுமார், அமைப்பு செயலாளர் வே.வேலு சுவாமி, அலுவலக செயலாளர் ப.பன்னீர்செல்வம், செயலாளர்கள் எம்.சண்முகம், தனசேகரன், ஆர்.சண்முக சுந்தரம், சிவப்பிரகாசம், ஐ.சி.எப்.துரை, பத்மநாபன், அருணகிரிநாதன், கோமளா, சென்னை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் சுந்தரமூர்த்தி, துணைச் செயலாளர் பாட்சா பாபு, அசோக்குமார், செயற்குழு உறுப்பினர்கள் அமுல்ராஜ், சத்தியகுமார் மற்றும் அனைத்துத் துறைகளைச் சார்ந்த தொழிலாளர்கள் திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

தொ.மு.ச. சார்பில் அனைத்து மாவட்டங்களிலும், போக்குவரத்து பணிமனைகளிலும், தொழிற்சாலைகளிலும், முதல்வரின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கொடியேற்றி, இனிப்பும், அறுசுவையும் அளித்து, நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடினர்.

முதல்வர் பிறந்தநாள்: க.செல்வம் தலைமையில்

அயனாவரம் பணிமனையில் தொழிலாளர்களுக்கு அறுசுவை உணவு!

பி.டி.சி.எஸ். ரவி – பெரம்பூர் த.ஆறுமுகம் வழங்குகின்றனர்!

சென்னை, மார்ச். 5-

கழகத் தலைவர் தமிழ் நாட்டின் முதலமைச்சர் போக்குவரத்து தொழிலாளியின் விடிவெள்ளி தளபதியார் அவர்களின் 73 வது பிறந்தநாள் விழா கழகத்தின் இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள் மற்றும் போக்குவரத்து துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் ச. சி.சிவசங்கர் வழிகாட்டுதலின்படி மாநகரப் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்கம் அயனாவரம் பணிமனை சார்பாக கழகத் தலைவரின் பிறந்த நாளை முன்னிட்டு இன்று (5.3.2026) பிற்பகல்12:00 மணி அளவில் தொழிலாளர்களுக்கு அறுசுவை விருந்து வழங்கல் நடைபெறுகிறது.

தலைமை க. செல்வம், முன்னிலை: ஜி.ஜோஸ்வா, யேசுதாஸ் டி.அருள், என். குப்புசாமி, எம். வெங்கடேசன், கே. சுப்பிரமணி, கே. பார்த்திபன், வரவேற்பு: இ.குணசீலன், ஜி.மாசிலாமணி, ஜி.தாந்தோணி, சி. ரவிக்குமார், டி. மதிவாணன், டி. குவேதாச்சலம், எம்.துளசி, வி.தண்டபாணி, எஸ். ஆர்துரை, மோகன், கே.ராஜு, பி.புஷ்பராஜ், க.ஞானசேகர், எம்.துளசிங்கம்,

சங்கத்தின் கொடியேற்றி இனிப்புகள் வழங்கிட தொழிலாளர் நண்பர்களுக்கு அறுசுவை விருந்தை மாநகரப் போக்குவரத்து ஊழியர் முன்னேற்ற சங்கம் தலைவர்:PTC S.ரவி (எ) சிவக்குமார் பொதுச் செயலாளர் பெரம்பூர் த. ஆறுமுகம் ஆகியோர் வழங்குகின்றனர்.

பொருளாளர்: எம்.பெருமாள் அமைப்பு செயலாளர்: நா.செல்வகுமார், தலைமை நிலை செயலாளர்: அ.தங்கராஜ், பிரச்சார செயலாளர்: மு.ஜோதி துணைத் தலைவர் : ஆர்.கந்தன், அயனாவரம் பணிமனை கிளை சங்க நிர்வாகிகள் மற்றும் வருகை புரிகின்ற தலைமை சங்க நிர்வாகிகள் பணிமனை செயலாளர்கள் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள்

நன்றி உரை: எஸ்.செந்தில்குமரன், எம்.செல்வம், பா.பிரபாகரன், எஸ்.அன்பரசு, எஸ்.அலெக்சாண்டர், டி.புருஷோத்தமன், இ.ஜெகதீசன்.

மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயற்குழு கூட்டம்!

பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே. ராஜன் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 5,

மதுரவாயல் வடக்குப் பகுதிக் கழக செயற்கு ழுக் கூட்டம் இன்று (05/02/2026) மாலை 5.00 மணி அளவில் பகுதி கழக அலுவலகத்தில் பகுதி கழக அவைத்தலைவர் ஆர். கர்ணல் தலைமையில், பகுதி கழக நிர்வாகிகள் ஆ. மாலினி, தீ. பாலாஜி, எம்.ஏ.செந்தில் சுரேஷ், ம. உதயகுமார் ஆகியோரின் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் வடக்கு பகுதி கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அது போது கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொன்னேரி சட்டமன்ற தொகுதி, மீஞ்சூர் பேரூர் திமுக சார்பில் கழகத் தலைவர், முதல்வர் அவர்களின் 73வது பிறந்தநாள் விழாவில் பேரூர் கழகச் செயலாளர் கா.சு–தமிழ் உதயா மற்றும் நிர்வாகிகள் முன்னிலையில் அம்மா பேரவை மீஞ்சூர் பேரூர் இணை செயலாளரும், அதிமுக 4வது வார்டு முன்னாள் அவைத் தலைவருமான திரு.கொள்ளட்டி திருமலை தாய் கழகமான திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்.